முழுப் பதிப்புரிமையுடையது / All Rights

மாகாணக்கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
**Provincial Department of Education Northern Province**
நிலையறிபரீட்சை - 2021

| | | |
|---|---|---|
| தரம் - 10<br>**Grade - 10** | சைவநெறி – 12 T I,II<br>**Saivanery** – 12 T I,II | 3 மணித்தியாலம்<br>**Three Hours** |

## பகுதி-I

01. வினைகளைப் போக்க வல்லவன் என்பதனால் விநாயகருக்கு வழங்கப்படும் பெயர்
    1) பிள்ளையார் 2) கணபதி 3) ஐங்கரன் 4) விக்கினேஸ்வரன்

02. ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலத்தின் வீரியத்தைத் தடுத்தல்
    1) மறைத்தல் 2) காத்தல் 3) படைத்தல் 4) அழித்தல்

03. மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்வது
    1) ஈகை 2) ஒப்புரவு 3) கொடை 4) கடமை

04. “அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்….”எனக் கூறுவது.
    1) திருக்குறள் 2) திருவாசகம் 3) திருமந்திரம் 4) வேதம்

05. சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் நாள்
    1) தைப்பொங்கல் 2) சித்திரை வருடப்பிறப்பு
    3) ஆடிப்பிறப்பு 4) தை வருடப்பிறப்பு

06. “நல்லவர்களைக் காத்து தீயவர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்ட காலந்தோறும் தோன்றுகின்றேன்” எனக் கூறியவர்.
    1) பிரமன் 2) முருகன் 3) நரகாசுரன் 4) கிருஷ்ணபகவான்

07. செவிவழியாகப் பேணி வந்தமையால் வேதங்களுக்கு வழங்கப்படும் பெயர்.
    1) சுருதி 2) எழுதாமறை 3) சுயம்பு 4) ஆம்நேயம்

08. திருவிசைப்பாவை அருளிய அருளாளர்கள்
    1) 12 2) 09 3) 01 4) 27

09. திருத்தொண்டர் புராணத்தை அருளியவர்
    1) நம்பியாண்டார் நம்பி 2) சுந்தரமூர்த்தி நாயனார்
    3) சேக்கிழார் 4) உமாபதி சிவாச்சாரியார்

10. திலகவதியார் வாழ்ந்த இடம்
    1) சீர்காழி 2) திருநாவலூர் 3) திருவொற்றியூர் 4) திருவாமூர்

11. கொடிமரம், கொடிச் சீலை, கொடிச் சீலையைச் சுற்றியுள்ள கயிறு என்பன குறிப்பது
    1) பதி, பசு, பாசம் 2) ஆணவம், கன்மம், மாயை
    3) அறம், பொருள், இன்பம் 4) நிலம், தீ, காற்று

12. தாம் கண்ட கயிலைக் காட்சியை எவ்வாறு நாவுக்கரசர் பாடினார்.
    1) ஒன்று கொலா மவர் சிந்தை 2) மாதர்ப் பிறைக் கண்ணியானை
    3) எண்ணுகேன் என் சொல்லி…. 4) பண்ணினேர் மொழி…..

13. சிவஞானபோதத்தின் வழி நூலாக அமைவது,
    1) சிவப்பிரகாசம் 2) உண்மை விளக்கம்
    3) சிவஞான சித்தியார் 4) திருவருட்பயன்

14. தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் விளங்குவது
    1) பெரிய புராணம் 2) ஆகமம் 3) வேதம் 4) தமிழாகமம்



kalvi.lk

15. சுவாமி விபுலானந்தருக்கு ஞானோபதேசம் செய்தவர்
 1) சுவாமி சிவாநந்தர் 2) சுவாமி விவேகானந்தர்
 3) சுவாமி இராமகிருஷ்ணர் 4) அருணாசலதேசிகர்

16. வேதம் என்ற சொல்லின் பொருள்
 1) அறிவு 2) பாட்டு 3) வேள்வி 4) இசை

17. குணங்குறிகளோடு கூடிய நிலை
 1) சொரூப நிலை 2) இயல்பு நிலை 3) தடத்த நிலை 4) சுயரூப நிலை

18. யாருக்கும் எவ்வகையிலும் தீமை பயக்காதவற்றைப் பேசுவதை வள்ளுவர் கூறும் அதிகாரம்
 1) அன்புடைமை 2) வாய்மை 3) கடமை 4) இறையுணர்வு

19. "பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்….." என்றபாடல் இடம்பெற்ற திருவாசகப் பகுதி
 1) பிடித்த பத்து 2) அடைக்கலப்பத்து 3) அச்சோப்பதிகம் 4) குயில் பத்து

20. மருணீக்கியார் சூலை நோயினின்றும் தம்மை விடுவிக்கக் கோரி பாடிய பதிகம்
 1) எண்ணுகேன் என் சொல்லி 2) மாதர்ப் பிறைக் கண்ணி…..
 3) கூற்றாயினவாறு……... 4) பொன்னார் திருவடிக்கு…..

21. உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூலை இயற்றியவர்
 1) மெய்கண்ட தேவர் 2) மனவாசகம் கடந்த தேவர்
 3) அருணந்தி சிவாச்சாரியார் 4) உமாபதி சிவாச்சாரியார்

22. இறைவனை அடைவதற்கு திருமூலர் கூறும் வழி
 1) விரதங்கள் 2) உண்மையான அன்பும் பக்தியும்
 3) ஆசாரங்கள் 4) தியானம்

23. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பேராசிரியர் என்ற பெருமைக்குரியவர்.
 1) பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்
 2) பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
 3) சுவாமி விபுலானந்தர்
 4) சைவப்புலவர் அருணாசலதேசிகர்

24. "செய்யும் தொழிலே தெய்வம்" இவ்வுண்மையை உணர்த்துவது
 1) சமுதாய உணர்வு 2) கல்வியுணர்வு 3) கலையுணர்வு 4) கடமையுணர்வு

25. நவக்கிரகங்களில் கிழமைப் பெயர்களில் அடங்காதவை
 1) இராகு, கேது 2) சந்திரன், செவ்வாய்
 3) சூரியன், சந்திரன் 4) சூரியன், திங்கள்

26. ஆன்மா மெய்யறிவு பெறுவதற்கு இறைவனால் வழங்கப்படுவது
 1) சித்தி, புத்தி, அகங்காரம், சொல் 2) தனு, கரணம், புவனம், போகங்கள்
 3) அறம், பொருள், இன்பம், வீடு 4) மனம், புத்தி, ஞானம், அறிவு

27. சூரியனை முழு முதலாகப் போற்றும் சமயநெறி
 1) சைவம் 2) சாக்தம் 3) சௌரம் 4) கௌமாரம்

28. சகலாகமபண்டிதர் எனும் சிறப்புப் பெயருக்குரியவர்
 1) உமாபதி சிவாச்சாரியர் 2) மனவாசகம் கடந்த தேவர்
 3) மெய்கண்ட தேவர் 4) அருணந்தி சிவாசாரியர்

29. "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் குறிப்பிட்டவர்
 1) திருவள்ளுவர் 2) ஔவைப்பாட்டி 3) திருமூலர் 4) திலகவதியார்

30. நவீன யுகத்து அரிச்சந்திரன் எனப் போற்றப்படுபவர்
 1) மஹாத்மா காந்தி 2) அரிச்சந்திரன் 3) பாரதியார் 4) திருவள்ளுவர்

31. இருக்கு வேதம் போற்றும் தெய்வங்கள் அடங்கும் தொகுதி
 1) சூரியன், விநாயகர் 2) வாயு, முருகன்
 3) இந்திரன், அனுமான் 4) வருணன், அக்கினி



kalvi.lk

32. அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்கள்
1) சமயப் பெரியார்கள்
2) சமயகுரவர்கள்
3) யோகியர்
4) சந்தான குரவர்கள்

33. "பிறரிடம் அன்பு காட்டுதலே உயர்ந்த தவமாகும்" என குறிப்பிட்டவர்
1) திருவள்ளுவர்
2) சுவாமி விவேகானந்தர்
3) பாரதியார்
4) சுவாமி விபுலானந்தர்

34. அட்டாங்க யோகம் அடங்கும் தொகுதி
1) சுருதி, சுயம்பு 2) இயமம், நியமம் 3) இரக்கம், அன்பு 4) மகிமா, லகிமா

35. பிரமச்சரிய நிலையிலிருந்த ஒருவரை இல்லறத்திற்குப் புக அங்கீகரிக்கும் சடங்கு
1) திருமணச் சடங்கு
2) பொலிச் சடங்கு
3) வித்தியாரம்பச் சடங்கு
4) முளைப்புச் சடங்கு

36. திருவாசகத்தை அருளியவர்
1) மாணிக்கவாசகர் 2) திருமூலர் 3) சேந்தனார் 4) கபிலதேவ நாயனார்

37. சூரிய உதயம் முதல் அடுத்தநாள் சூரிய உதயம் வரையான ஒரு நாள் கால எல்லையைக் கொண்ட இனத்தவர்
1) இஸ்லாமியர் 2) கிரேக்கர் 3) கிறிஸ்தவர் 4) இந்துக்கள்

❖ **மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவு செய்க.**

| சைவம் வளர்த்தவர்கள் | வாழ்வியல் சம்பவம் | நூல்கள் |
|---|---|---|
| **A**<br>அருணாந்தி சிவாச்சாரியார் | **D**<br>சிவாநந்தரிடம் ஞானோபதேசம் பெற்றமை | **G**<br>திருமந்திரம் |
| **B**<br>சுவாமி விபுலானந்தர் | **E**<br>மூலனது உடலில் புகுந்தமை | **H**<br>இருபாஇருப∴து |
| **C**<br>திருமூலர் | **F**<br>மெய்கண்டாரைக் குருவாகக் கொண்டமை | **I**<br>யாழ்நூல் |

38. சகலாகமபண்டிதருடன் தொடர்புடைய தொகுதி
1) A, F, H 2) B, F, I 3) C, F, G 4) A, D, H

39. பிரபோதசைதன்யருடன் தொடர்புடைய தொகுதி
1) B, E, I 2) B, F, I 3) C, F, G 4) B, D, I

40. தமிழாகமத்துடன் தொடர்புடைய தொகுதி
1) A, E, I 2) A, F, G 3) C, E, G 4) B, D, I

(40x1=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி –II

- ❖ **முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- ❖ **முதலாம் வினாவின் விடைகளுக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைகளுக்கும் 10 புள்ளிகளும் வழங்கப்படும்.**

01. மேல்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.
    i) பஞ்ச கிருத்தியங்களை இறைவன் எந்த நிலையில் நின்று ஆற்றுகின்றார்?
    ii) ஆசாரத்தின் இரண்டு வகைகளையும் தருக.
    iii) அகச் சந்தான குரவர்களைக் குறிப்பிடுக.
    iv) சம காலத்தில் வாழ்ந்த சமய குரவர்களைத் தருக.
    v) உற்சவத்தின் ஆரம்பத்தில் வைரவ மூர்த்திக்குச் செய்யும் பூசையைக் குறிப்பிடுக.
    vi) திருமுறைப் பாடல்களைப் பாடுவதனால் கிட்டும் பயன்கள் நான்கு தருக.
    vii) கன்னிகாதானம் எனப்படுவது யாது?
    viii) முருகனுக்குரிய விரதங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
    ix) காலக் கணிப்பு அலகுகள் நான்கினைத் தருக.
    x) சைவ வாழ்வியலில் கடைப்பிடிக்கும் பண்புகள் நான்கு தருக.

(2x10=20 புள்ளிகள்)

02. i) மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
    அ) அங்கமும் வேதமும்………..
    ஆ) பால் நினைந்து ஊட்டும்..………
    இ) நாம் ஆர்க்கும் குடியல்லோம்………..….
    ஈ) யாவர்க்குமாம் இறைவற்கு………..
    உ) கற்றவர் விழுங்கும்………..

    ii) மேலே(i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

(3+2x2=10 புள்ளிகள்)

03. ''மனிதனை நெறிப்படுத்துவது விழுமியங்களாகும்.''
    i) விழுமியம் என்பதன் வரைவிலக்கணத்தைத் தருக.
    ii) விழுமியப் பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.
    iii) வாய்மை பற்றி விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

04. ''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''
    i) இப்பாடல் இடம்பெற்ற நூல் யாது? பாடியவர் யார்?
    ii) இப்பாடலின் பொருளைத் தருக?
    iii) சிவனடியார்களின் இயல்புகளையும் சிறப்புக்களையும் சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

05. ''அன்பு வழியில் நின்று சைவசமயத்தை வளம்படுத்தியவர்கள் சமயகுரவர்களாவர்.''
    i) திருநாவுக்கரசரின் மறுபெயர்கள் இரண்டினைத் தருக?
    ii) திருநாவுக்கரசருக்கு சமணர்கள் இழைத்த கொடுமைகளைக் குறிப்பிடுக.
    iii) திருநாவுக்கரசர் செய்த அற்புதங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

06. ''கடவுள் எங்கும் உள்ளவர் எல்லாவற்றையும் கடந்தவர்''
    i) இறைவனின் எண் குணங்களில் நான்கினைத் தருக?
    ii) சச்சிதானந்தரூபி என இறைவனைக் குறிப்பிடுவதற்கான காரணத்தைத் தருக.
    iii) ஐந்தொழில்களைச் சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

07. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
    i) வேதங்கள்
    ii) திருமணச் சடங்கு
    iii) திலகவதியார்
    iv) கந்தசஷ்டி

(5+5=10 புள்ளிகள்)



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**